**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 2ம் நாள்
**இ.ம.எண். 1/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 212/2019**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, காழியப்பநல்லூர் கிராமத்தில் வசிக்கும் நாகலிங்கம் குமாரர் கிருஸ்துவர் 50 வயதுடைய ஈசாக்குபாலகுரு.

..மனுதாரர்/ பிரதிவாதி

//எதிர்//

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, காழியப்பநல்லூர் கிராமத்தில் வசிக்கும் வில்லியம்ஸ் குமாரர் கிருஸ்துவர் 80 வயதுடைய அருள்தாஸ்.

..எதிர்மனுதாரர்/ வாதி

மனுதாரர் இம்மனுவை வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்திகளில் அமைப்பு மற்றும் அமைவிடத்தை பார்வையிட்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு நீதிமன்ற கட்டணமாக ரூ.20 செலுத்தப்பட்டுள்ளது.

மனு 26.09.2024 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 26.09.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 16.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு நன்கு பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவாணை</u>**

இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**<u>சொத்துவிபரம்-1</u>**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார்-பதிவகம் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 37 காழியப்பநல்லூர் கிராமம் தெற்கு தெரு, புஞ்சை புல எண்.349/1B-ல் (முன்நூற்று நான்பத்தொன்பது உட்பிரிவு ஒன்று B) திட்ட விஸ்தீரணம் ஹெக் 0.69.0 புகல் 144.46 சதுர மீட்டர் (1555 சதுரடி) மனையம் அதில் 50 சதுர மீட்டர் அளவில் உள்ள RCC கட்டிடம் உள்படவும் இதர இனங்கள் ஏதுமில்லை. பட்டா எண் 686.

**நான்கெல்லைகள்:-**

வடக்கில் எழுதி பெறும் மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான RCC கட்டிடம் மற்றும் காலி மனை, கிழக்கில் தெற்கு தெரு, மேற்கில் சந்திரசேகரன் புஞ்சை நிலம், தெற்கில் எழுதி தரும் எனது இதர புஞ்சை நிலம் இதற்குட்பட்டது.

**<u>சொத்துவிபரம்-2</u>**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி துணைப் பதிவு மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, 37 காழியப்பநல்லூர் நல்லூர் வட்டம் மேற்படி கிராமம் தெற்கு தெருவில் உள்ளது. புஞ்சை சர்வே எண்.349/1B–ல் திட்டிடிட விஸ்தீரணம் 1 ஏக்கர் 69 செண்டு இதில் ஒரு பகுதி மேற்படி தெற்கு தெருவுக்கு மேற்கு, சந்திரசேகரன் புஞ்சை நிலத்துக்கு கிழக்கு, தெற்கு எனது இதர புஞ்சைக்கு வடக்கு இதற்குட்பட்ட மனை புஞ்சை சர்வே எண் முன்நூற்று நான்பத்தொன்பது உட்பிரிவு ஒன்று B-யில் கீழ்புறம் தென்வடல் ஜாதியடி 22, மேல்புறம் கீழ்புறம் ஜாதியடி 109 இந்த அளவுள்ள 2398 சதுரடி மனையும் அதற்குள் கட்டப்பட்டிருக்கும் தென்வடல் 15, கீழ்மேல் 58க்கு 870 சதுரடி தென்னங்கீற்று போடப்பட்ட கூரை கட்டிடம், மின் இணைப்பு உள்படவும், கதவு எண். 3-141/1 மின் இணைப்பு எண்.2122 கட்டிட பாகம் தென்னங்கீற்று கூரை 58 X 15 க்கு 870 சதுரடி.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.